# IN THE SPECIAL COURT OF FOREST OFFENCE CASES JUDGE,

## KANNIYAKUMARI DISTRICT AT NAGERCOIL

## C.C. No. 21/2025

## Deposition of P.W. 2

**Name** : **Thiru.** திரு. குஞ்சுராமன்

**Father's Name** :

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

**Dated** : **06.08.2026**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :**

நான் தற்போது பூதப்பாண்டி வனச்சரகம் அரசு மரமண்டி கட்டுப்பாட்டு அறையில் வனக்காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது வேளிமலை வனச்சரகம் செல்லந்திருத்தி பீட் வனக்காப்பாளராக பணியாற்றி வந்தேன். இந்த வழக்கு ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். மற்ற எதிரிகளான 2,7,8 மற்றும் 10 மற்றும் வழக்கில் இருந்து தனியாக பிரிக்கப்பட்ட எதிரியான பொந்து நடராஜன் ஆகியோர்களையும் தெரியும். 11.10.2019 அன்று சுமார் 12 மணியளவில் நானும் சுருளகோடு பிரிவு வனவர் அவர்களும் புத்தன்அணை ஒத்த பாலம் வழியாக புத்தன் அணை சராகப்பகுதியில் தணிக்கை செய்யும் போது அரசு பாதுகாப்பு காட்டில் பிரான்சிஸ் பாதுகாப்பு காட்டின் பாதையில் வருவதை கண்டு நான் ஓடிச்சென்று மறித்து விசாரித்த போது அவரின் இடுப்பில்

வெட்டு கத்தி 1 இருந்தது. அதை நான் பிடிங்கி எடுத்தேன். அப்போது சமயம் 12.10 இருக்கும். அந்த இடத்தில் வைத்து மேலும் விசாரித்த போது பல மாதங்களுக்கு முன்னால் தேக்கு மரங்களை வெட்டிய தேக்கு துண்டுகள் பாறையின் மறைவில் வைத்திருப்பதாக எங்களிடம் சொன்னார். உடனே நானும் பிரிவு வனவரும் விசாரித்த இடத்தில் இருந்து கிழக்கு பக்கமாக 100 அடி தள்ளிபாறையில் மறைத்திருந்த தேக்கு துண்டுகளை காண்பித்து தந்தார். அப்போது மணி 12.30 இருக்கும். பிறகு அது சம்மந்தப்பட்ட தேக்கு துண்டுகளை 1ல் இருந்து 15 வரை சிவப்பு பெயிண்டால் எண்ணிடப்பட்டது. பிறகு அது சம்மந்தமான தேக்கு வெட்டுமோட்டு பகுதிகளை காண்பித்து தருவதாக சொன்னார். அதை பிரிவு வனவர் அளக்க நான் சிவப்பு பெயிண்டில் 17 என எண்ணிடப்பட்டேன். அப்போது சமயம் 1.30 இருக்கும். மேலும் அவரை தீவிரமாக விசாரித்த போது எதிரியும் அவரது கூட்டாளிகள் இணைந்து 1 1/2 வருடங்கள் முன்னால் தேக்கு மரங்களை பொன்மனை பீட் குதிரைகுழி ஓடை சராக பகுதியில் வெட்டியதாகவும் அவர் ஒப்புக்கொண்டு காட்டி தருவதாக சொன்னார். நாங்கள் எதிரி கூறிய இடத்திற்கு புத்தன்அணை ஒத்தப்பாலம் வழியாக அந்தகரை வழியாக காணிகுடியிருப்பு செல்லும் பாதை வலதுபுறம் 30 அடி தள்ளி 60 வெட்டுமோட்டுகளை காண்பித்து தந்தார். அப்போது சமயம் 2.30 இருக்கும். பிறகு பிரிவு வனவர் அளக்க நான் 60 வெட்டுமோட்டுகளுக்கு சிவப்பு பெயிண்டால் எண்ணிட்டேன். அப்போது சமயம் 4 மணி இருக்கும். குற்றவாளி பிரான்சிஸ் சொன்ன குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் விசாரணை செய்ததில் குற்றம் உறுதி செய்யப்பட்டு சம்மந்தப்பட்ட நபர்களாக சில்வாஸ், தோமஸ், செல்வராஜ், ரதிஸ், அருண்குமார், சுரேஷ்குமார், நடராஜன், ஜோரோன், ஜான், டல்லஸ், முருகேசன், சுரேஷ் போன்றோர்களை குற்ற அறிக்கை செய்து நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது. அன்று இரவு ஆதனால் வேளிமலை வனச்சரக அலுவலகத்தில் வனக்குற்ற எண் 2/2019 வன வழக்கு பதிவு

செய்யப்பட்டது. மறுநாள் 12.10.2019 குற்றவாளி பிரான்சிஸை தனி சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜராகி நீதிமன்ற ஆணைப்படி மாவட்ட சிறை சாலையில் அடைக்கப்பட்டார். ஸ்தல மகசர் என்னால் தயார் செய்யப்பட்டது. குற்ற ஒப்புதல் வாக்குமூலம் என் முன்னிலையில் நடைப்பெற்ற போது சாட்சி கையொப்பம் செய்தேன். வனக்குற்ற அறிக்கை என்னால் தயார் செய்யப்பட்டது. வெட்டுமோட்டு பட்டியல் என்னால் தயார் செய்யப்பட்டது. அத்தாட்சி மற்றும் எச் நமுனா என்னால் தயார் செய்யப்பட்டது. குற்றவாளி பிரான்சிஸின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படியில் மாவட்ட உதவி வன பாதுகாவலர் தேடுதல் ஆணைப்படி மணி இரவு 11.30 மணியளவில் வனச்சரகர் தலைமையில் நானும், பிரிவு வனவர் ராஜசேகர் அவருடன் இணைந்து குலசேகரம் மார்த்தாண்டம் செல்லும் பாதையில் உள்ள உண்ணாமலை கடை பகுதியில் உள்ள uk wood furniture மற்றம் freezer service மரப்பட்டறையில் 12.30 மணிக்கு இணைந்து சோதனை செய்தோம். அப்போது முருகேசன் என்பவர் அறுப்பு சைஸ் தேக்கு பலகைகள் மற்றும் தேக்கு சட்டங்கள் , தேக்கு ஜன்னல் சட்டங்கள், புறவெட்டு பலகைகள் போன்றவற்றை அடுக்கும் வேலையில் ஈடுப்பட்டு இருந்தார். அவரை விசாரிக்கும் போது இந்த பட்டறை ஜான் என்பவருடையது என்றும் மேற்படி பலகைகளை தற்போது தான் பிக்கப் வாகனத்தில் கொண்டு வந்து இறக்கி வைத்தாக சொன்னார். அப்போது பிக்கப் வாகனம் அந்த இடத்தில் இருந்தது. விசாரிக்கும் போது அந்த பிக்கப் வாகனத்தின் ஓட்டுநர் சுகின் த/பெ. கோபாலன், வயது 27 என கூறினார். அந்த சமயம் விசாரிக்கும் போது அந்த இடத்தில் இருந்து ஓட்டுநர் சுகின் அங்கிருந்து தப்பியோடிவிட்டார். நாங்கள் அந்த தேக்கு சம்மந்தமான பொருட்களை பார்க்கும் போது வன வழக்கு சம்மந்தமான OR 1/2019 , OR2/2019 வழக்கில் சம்மந்தப்பட்ட அரசு பாதுகாப்பு காட்டில் இருந்து எடுத்து வரப்பட்ட தேக்கு மரங்களின் அறுப்பு சைஸ் பொருட்கள் என உறுதி செய்யப்பட்டது. அப்போது அதிகாலை 12.45 இருக்கும். உடனே

உண்ணாமலை கடை கிராம நிர்வாக அலுவலர் (பொறுப்பு) மாணிக்கவேல் அவரை தொலைப்பேசியில் அழைத்து வரவைக்கப்பட்டு அவர் முன்னிலையில் அறுப்பு சைஸ் தேக்கு, சட்டங்கள் , ஜன்னல் சட்டங்கள் , பலகைகள் மற்றும் புறவெட்டு பலகைகள் பறிமுதல் செய்து பிக்கப் வாகனம் மற்றும் முருகேசனை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினோம். ஸ்தல மகசரில் நான் கையெழுத்து செய்தேன். குற்ற ஒப்புதல் வாக்குமூலம் என்னால் தயார் செய்யப்பட்டது. 14.10.2019 அன்று தலைமறைவு குற்றவாளிகளை பிடிப்பதற்காக வேளிமலை வனச்சரகர் தலைமையில் நானும், பிரிவு வனவர் திரு. ராஜசேகர் மற்றும் பொன்மனை பீட் வனக்காப்பாளர் திரு. ராஜன் அவர்களும் வேளிமலை வனச்சரக ஜீப்பை எடுத்து கொண்டுபொன்மனைக்கு புறப்பட்டோம். அப்போது ரகசிய தகவலின் அடிப்படையில் குற்றவாளி சுரேஷ் த/பெ.தோபிதாஸ் பொன்மனை சந்திப்பில் நிற்பதாக தகவல் கிடைக்கப்பட்டு வேளிமலை வனச்சரக ஜீப்பை பொன்மனை சிவன் கோவில் முன்பாக நடைப்பாதையில் நிறுத்திவிட்டு நாங்கள் நடத்தே பொன்மனை சந்திப்பு செல்லும் போது குற்றவாளி சுரேஷ் தப்பியோட முயன்றார். அவரை ராஜன் வனக்காப்பாளர் ஓடிச்சென்று சட்டை காலரை பிடித்து வண்டியில் ஏற்றினார். நாங்கள் அவரை வனச்சரக அலுவலகத்திற்கு கொண்டு வந்து விசாரிக்கும் போது என்னுடைய வாகன எண் TN 74 T 1581 என்ற டெம்போ வாகனத்தில் அரசு பாதுகாப்பு காட்டில் இருந்து தேக்கு மரங்களை கொண்டு வந்ததாக தன்னுடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னார். அந்த டெம்போ எங்கு உள்ளது என கேட்கும் போது பொன்மனை சந்திப்பில் அரசு பள்ளிக்கூடத்திற்கு முன்புறம் உள்ள டெம்போ ஸ்டேன்டில் நிற்பதாக சொன்னார். உடனே அவரை வேளிமலை வனச்சரக ஜீப்பில் ஏற்றிக்கொண்டு பொன்மனை சந்திப்பிற்கு சென்று அரசு பள்ளிக்கூடத்திற்கு முன்னால் இருந்த டெம்போ ஸ்டேன்டில் மங்கலம் பெயர் கொண்ட டெம்போவை பறிமுதல் செய்து வனச்சரக

அலுவலகத்திற்கு கொண்டு வந்தோம். மேலும் குற்றவாளியை தீவிரமாக விசாரிக்கும் போது குற்றவாளிகளாக சில்வான்ஸ், தாமஸ், செல்வராஜ், ரதிஸ், அருள்குமார், சுரேஷ், சுரேஷ்குமார் மற்றும் பிரான்சிஸ், நடராஜன், டல்லஸ், ஜான், சுகின் போன்றோர்கள் செல்லந்திருத்தி பீட் புத்தன்அணை சராகப்பகுதியில் உள்ள தேக்கு மரங்களை வெட்டி தனது டெம்போவில் கொண்டு வந்து சில்வான்ஸ் உடைய ரப்பர் தோட்டத்தில் அமைந்துள்ள smoke house அந்த இடத்தில் மறைத் து வைத்ததாக சொன்னார். மேலும் தோமஸ் என்பவர் வன எல்லையை ஒட்டிய பட்டா நிலத்தில் ரப்பர் மரம் வெட்டும்போது ரப்பர் மரங்களை வெட்டி லோடு ஏற்றும்போது பொன்மனை பீட்டில் வெட்டப்பட்ட நல்ல தேக்கு துண்டுகளை தனது டெம்போவில் ரப்பர் லோடு ஏற்றும்போது அடியில் வைத்து சில்வான்ஸ் என்பவருடைய smoke house இடத்திற்கு கொண்டு மறைவான இடத்தில் வைத்ததாக கூறினார். அந்த இடத்தில் இருந்து தேவைப்படும் போது உண்ணாமலை கடையில் உள்ள ஜான் என்பவருடைய UK wood furniture மரப்பட்டறைக்கு சுகின் என்ற பிக்கப் வாகன ஓட்டுநர் தேவைப்படும் போது smoke house ல் இருந்து கடைக்கு கொண்டு வருவார். அப்போது நேரம் 2.30 இருக்கும். பிறகு வனச்சரகர் உத்தரவு படி குற்றவாளி சுரேஷ் என்பவரை கைது செய்து தனி சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நீதிமன்ற உத்தரவுபடி மாவட்ட சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். மற்ற குற்றவாளிகள் தலைமறைவாகிவிட்டார்கள். பிறகு அவர்கள் நீதிமன்றத்தில் ஜாமின் பெற்றதால் கைது செய்யவில்லை. ஸ்தல மகசர் மற்றும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன். ( **எச் நமுனா அ.சா.ஆ 3 ஆகவும், வனக்குற்ற அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும், 11 வது எதிரி முருகேசன் அளித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.5 ஆகவும், 11.10.2019 ஆம் தேதியிட்ட 12 மணிக்கு தயார் செய்யப்பட்ட ஸ்தல மகசர் அ.சா.ஆ. 6 ஆகவும், 11.10.2019 ஆம் தேதியிட்ட 12 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சி அ.சா.ஆ. 7 ஆகவும், வெட்டுமோட்டு பட்டியல் அ.சா.ஆ 8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**